ஸ்ரீ:
ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீஸமய திவாகரம்.

தொகுதி எ. சுக்கிலவருஷ மாசிமீ பகுதி உ.
Vol 7. February & March 1930. No. 2.

கம்பர் கடவுள் வாழ்த்து.

இறைவனை யறிதற்குக் கருவியாயிருக்கிற வேதம் அவ்வவ்வுலகினில் வாழ்கிற புருஷர்களின் உணர்விற்கேற்றவாறு விரிந்தும் சுருங்கியுமிருக்கும், அதுபோல் ஸ்ரீராமாயணமும் ஸத்யலோகத்திலுள்ளவர்களின் அறிவிற் கேறறவாறு" சரிதம் ரகுநாதஸ்ய ஶதகோடி ப்ரவிஸ்தரம்" "சரிதம் ரகுநாதஸ்ய சதகோடி ப்ரவிஸ்தரம்" என்றபடி நூறுகோடி க்ரந்த வடிவினதாயிருந்தது. பின்னர் அதுவே இவ்வுலகத்திலுள்ளவர்களின் அறிவிற்கேற்றவாறு இருபத்துநாலாயிரம் க்ரந்தமாக வால்மீகிபகவான வாயிலாக வெளிவந்தது. பிறப்பிலியாகிய ஸர்வேசுவரன் உலகத்தைப் பாதுகாக்கும் நிமித்தமாகத் தசரதச்சக்கரவர்த்திக்குப் புதல்வனாக வந்தவதரித்ததுபோல அவ்விறைவனைக் குறித்துப் பேசுகிற பிறப்பிலியாகிய வேதபுருஷனும் வால்மீகிபகவான் வாயிலாக ஸ்ரீராமாயண வடிவினனாய் வந்தவதரித்தான். இதுபற்றியே ஸ்காந்தபுராணத்தில் "வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தஶரதாத்மஜே, வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா" "வேத வேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே, வேத: ப்ராசேத ஸதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா" என்று சொல்லப்பட்டுளது. இதன் சீர்மை நோக்கியே ஆன்றோர்கள் "இதிஹாஸ சிரேஷ்டமான ராமாயணம்" என்றும், "படிகொண்ட கீர்த்தியிராமாயணம்" என்றும் அருளிச் செய்தார்கள்.

இத்தகைய பெருமையுமருமையும் வாய்ந்த இராமாயணத்தைத் தமிழுலகம் களித்தின்புறுமாறு கல்வியிற் பெரிய கம்பர் தமிழ்ப் பெருங்காப்பிய வடிவினவாகக் கூறத் தொடங்கியவர் தாமெடுத்துக் கொண்ட காரியம் இனிது நிறைவேற வேண்டுமென்று ஒவ்வொரு காண்டங்கடோறும் கடவுள்வாழ்த்துக் கூறியுள்ளார். அவ்வாழ்த்துப் பாக்களெல்லாம் சாலச்சிறந்த பொருளமைதியுள்ளனவாதலால் அவற்றை மீண்டு வெளியிடல் இன்றியமையாததொன்றுமெனக் கருதி "கம்பர் கடவுள் வாழ்த்து" என்று தலைக்குறிப்பிட்டு வெளியிடப் பெறுகிறது.

தத்துவங்கடந்து நின்ற பரம்பொருளின் இலக்கணம் இன்னதென்று ஒருவகையானறிந்தபின்பன்றி அதனை வாழ்த்துவதென்பதியலாதாதலான் முன்னர்ப் பரம்பொருளின் இலக்கணங் கூறுகிறார்:—

உலகம்யாவையுந்தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலும்நீக்கலும்நீங்கலா
அலகிலாவிளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கேசரணங்களே.

இதன் பொருளாவது:— எல்லாவுலகங்களையும் ஆக்கி அளித்து அழிக்கும் முத்தொழில்களையும் ஒழிவில்லாத விளையாட்டாகக் கொண்டுள்ளவன் எவனோ? அவனே தலைவனாவான்; அவனுக்கே எல்லா வாழ்த்துக்களும் உரியனவா மென்பதாம்.

இனி, இதற்கு விரிவுரை வருமாறு.

வேதாந்தத்தில் பிர்ம்மத்தின் இலக்கண முரைக்க வந்த விடத்தில் இந்த ஜகத் எவனிடத்திலிருந்துண்டாயிற்றோ? எவனால் காக்கப்படுகிறதோ? எவன் வயினொடுங்குகிறதோ? அவனே இறைவனாவான என்று சொல்லப்பட்டுளது. அம்முறை பற்றியே இவரும் "உலகம் யாவையுந்தாமுளவாக்கலும், நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா, அலகிலா விளையாட்டுடையார்" என்றார். இதனால் ஜகத்காரணத்வம் பிர்ம்மத்திற் குண்டென்பது வெளியாயிற்று.

வேறு சில மதவாதியர்கள் ஜகத்காரணத்வம் இறைவனுக்கில்லையென்று வாதிக்கின்றார்கள். அவர்கள் கூற்றையும் மேற்கொண்டு

களைந்தாலன்றி இறைவனுக்கே ஜகத்காரணத்வ முண்டென்பது நிர்ணயிக்கப் பட்டதாகாதாதலால் இங்கு அம்மத வாதியரின் கொள் கைகளும் உரைக்கப் பெறுகின்றன:—

1. சாங்கியர்கள், வேதார்த்தத்தை மந்த மதிகளால் நிர்ண யிக்க வொண்ணாது; ஸ்மிருதிகளைக் கொண்டே அறியவேண்டும்; ஸ்மிருதிகளும் பலதிறத்தனவாயிருக்கின்றன; அவற்றுள் மநுமுத லானோர்களின் ஸ்மிருதிகளில் பிரம்மமே ஜகத் காரணமென்று கூறி யிருக்கினும் முக்யமாக வர்ணாசிரம ஆசாரங்களையும், வேறு சில தர் மங்களையும் கூறுகின்றமையால் இந்த ஸ்மிருதிகளைக் கொண்டு வேதார்த்த நிச்சயம் செய்யலாகாது; கபில ஸ்மிருதி மோக்ஷத்தைப் பற்றியே கூறுகின்றதனால் அதைக் கொண்டே வேதார்த்தத்தின் முடிவுகாண வேண்டும்; அதில் மூலப்பிரகிருதியே ஜகத் காரணமாகு மென்று சொல்லப் பட்டுளது; என்றார்கள்.

2. மேலும், ஆலம் விதையிலிருந்து அரசம் பழமுண்டாவ தில்லை, அதுபோல ஸத்வ ரஜஸ்தமோகுணமாய், பரிணாமியாய், அசேதனமாய், விகாரத்திற் கிருப்பிடமாயுள்ள இந்த ஜகத்திற்கு ஜ்ஞானானந்த ஸ்வரூபனாய், ஏகரூபனாய், பரம சேதனமாய், நிர்விகார

---

1. வேதார்த்த நிச்சயத்தில் கபில ஸ்மிருதியே முக்கியமாகக் கொள்ள வேண்டு மென்று சாங்கியர்கள் சொல்வது பொருந்தாது. ஸ்மிருதிகளுள் ஒன்றுக் கொன்று விரோதந் தோன்றினால் அவற்றுள் எந்த ஸ்மிருதி வேதத் திற்கு விரோதமாக விருக்குமோ அந்த ஸ்மிருதியை நீக்கி, வேதத்தோடு ஒற்றுமையுடைய ஸ்மிருதியைக் கைக்கொள்ள வேண்டும். இந்தக் கபில ஸ்மி ருதி மாத்திரமே மூலப்பிரகிருதியே ஜகத் காரணமென்று சொல்லுகின் றது. இஃதொழிந்த இதிஹாஸ புராணங்களும், மந்வாதி ஸ்மிருதிகளும், பக வத்கீதையும் பிர்ம்மமே ஜகத் காரண மென்று முறையிடுகின்றன. வேதத் திலும் பிர்ம்மமே ஜகத் காரண மென்றுரைத்துள்ளதினால் இதனோடு மற்ற இதிஹாஸ புராண மந்வாதி ஸ்மிருதிகளின் பொருள்களும் ஒற்றுமையுற்றி ருக்கின்றமை யறியலாம். இந்தக் கபிலஸ்மிருதி வேதத்தோடு விரோதப்படு கின்றதினால் இதைப் பிரமாணமாகக் கொள்ளலாகாது.

2. வேதாந்தத்தில் ஜகத் காரணமான வஸ்து வானது 'நான் அநேக விதமாக ஆகப்போகிறேன்' என்று முன்னரே ஸங்கல்பித்ததென்று சொல் லப்பட்டுளது. அந்த ஸங்கல்பம் அசேதனமான மூலப்பிரகிருதிக்கு எவ்வாற்

னாயுள்ள பரமாத்மா காரணமாக மாட்டான். பரிணாமியாய், முக்குண வடிவினதாய், அசேதனமாயிருக்கிற மூலப்பிரகிருதியே. குடத்துக்கு மண்ணுருண்டை போல ஜகத்திற்குக் காரணமாகும் ஆனால் இந்த மூலப்பிரகிருதிக்கு ஜகத் காரணத்வமுண்டாம்போது இதற்கு எல்லாவற்றையும் அறியுந்தன்மை வேண்டுமே யென்னில்; ஸத்வகுண முடையவர்களை ஜ்ஞாநாதிகர்கள் என்பது போல ஸத்வ குணமுடைய மூலப்பிரகிருதியை ஸர்வஜ்ஞ மென்று சொல்வதில் தடையாதுளது?

ருனுங் கூடாது. பிரகிருதி ஸத்வகுண முடைமையால் அதை ஸர்வஜ்ஞ மென்று சொல்லலா மென்றால், அது ஏனைய ரஜோகுண தமோ குணங்களையுமுடைய தாயிருத்தலால் அஜ்ஞ மென்று சொல்லலாமன்றோ! அசேதனமான குடமுதலியவையும் மண்ணும் பிருதிவியே யாகிறது போல் காரண காரியங்களிரண்டும் ஏகத்திரவியமாய், ஏகரூபமாயிருத்தல் வேண்டும்; வேறுபட்டிருக்கலாகா தென்கிற நியமமில்லை. தேனடையில் புழுவும், கோமயத்தில் தேளு முண்டாகின்றன. அதுபோல பரமசேதனனாகிய ஈசுவரனிடத்திலிருந்து அசேதனமான ஜகத்துண்டாகலாம்.

இன்னும், கார்யமான குடமும் காரணமான மண்ணும் பிருதிவியே. குடமுண்டாவதற்கு முன்பு அக்குடம் மண்ணுருண்டையில்லயமாயிருந்தது; பின்னர் உண்டாகிறது. உண்டாகையாவது— நாம ரூபங்களைப் பெறுகை. முன்னில்லாதது இப்பொழுதுண்டாகிற தென்பதில்லை. இல்லாததுண்டாகிற தென்னில்; முயற் கொம்பு முதலியனவு முண்டாகலாமன்றோ! மண், உருண்டையாயிருக்கும் போது மண்ணென்றும், அந்த உருண்டை வடிவை விட்டு வாயும் வயிறுமான வடிவத்தை யடைந்தால் குடமென்றும வழங்கப் படுகின்றன. இதனால் காரணத்திலில்லாத தொன்று கார்யத்திலில்லை யென்பது பெறப்படும்.

மேலும், கார்யரூபமான ஜகத்திற்கு விலக்ஷணமான பரமாத்மா காரணமானால் ஜகத்துண்டாவதற்கு முன்பு இது ஈசுவரனிடத்தில்லயித் திருந்த தென்று கொள்ள வேண்டும். அவ்வாறு சொல்வதற்கு மிடமில்லை ஏனென்றால்; ஒருபொருளில் அதனின் வேறுபட்ட மற்றோர் பொருள் லயிக்கமாட்டாது. அங்ஙனமாம்போது இந்த ஜகத்துண்டாவதற்கு முன்பு பிர்ம்மத்தில் இஃதொடுக்கவில்லை யென்று கொள்ள வேண்டும். அவ்வாறு கொள்ளில்; இந்தக் குடம் மண்ணென்று சொல்வது போல் இந்த ஜகத் பிர்ம்மம் என்று சொல்கிற வேத வாக்யம் பொருளற்றதாய்விடும். பின்னை யாது செய்வதெனின்? கார்ய காரணங்கள் ஏகத்திரவியமாயிருக்க வேண்டு மென்ற நியம

3. ஸங்கல்பித்தல் அசேதனமாயிருப்பதற்கியலாதாதலால் மூலப்பிரகிருதி ஜகத்காரணமாகமாட்டாதென்று சொல்வதற்கிடமில்லை; உலகத்தில் எஜமானனாயிருப்பானொருவன் தனக்கு மிகவும் உபகாரியாயிருக்கும் சேவகனைப்பார்த்து 'இவன் எனக்குப்பிராணன்' என்று சொல்லுகிறான். அதுபோல ஆத்மாவுக்குப் போக மோக்ஷ ரூபமாகிய மஹோபகாரத்தைச்செய்கிற மூலப்பிரகிருதியை ஆத்மாவென்றுஞ் சொல்லலாம். ஆதலால் இதற்கு ஸங்கல்பமும் கூடு மென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

4. இன்னும், பால் பசுவின் மடியிலிருந்து தானே வழிவது போலவும், நீர் தானே ஓடுவதுபோலவும் ஒரு புருஷனுடைய அபேக்ஷையின்றி மூலப்பிரகிருதிதானே ஜகத்தை யுண்டுபண்ணக் கூடும்.

மில்லை யென்று சொன்னோம்; ஆயினும் கார்ய காரணங்கள் ஏகத்திரவியமாயிருத்தல் வேண்டு மென்பதும் எங்கட்கும் உடன்பாடேயாம். ஒரு பொருளானது காரண நிலைமையை விட்டுக் கார்ய நிலைமையையடையும் போது காரண நிலைமையோடு சமான லக்ஷணத்தையு மடையலாம். அதைக் காட்டிலும் விலக்ஷணமாயுமாகலாம். தாங்ய முதலியவைகள் மண்ணினின்று முண்டாகி முடிவில்மண்ணிலே லயமடைகின்றன. ஆகையால் அவற்றிற்கு மண் உபாதானமாகிறது. அதுபோல ஜகத்தின் தோற்ற வொடுக்கங்கட்கு ஆதாரமாகிய பிர்ம்மமே உபாதானமாகக் கடவது.

3. மூலப்பிரகிருதிக்குச் சேதனத்வமுண்டென்பதற்குச் சாங்கியர்கள் எடுத்துக்காட்டிய உதாரணம் சிறிதும் பொருந்தாது. எவ்வாறென்றால் ஒருவன் உகப்பின் மிகுதியால் ஒருவனை 'இவன் எனக்குப் பிராணன்' என்றால் அவன் இவனுக்குப் பிராணனாகிவிடுவானோ? உலகத்தில் மகிழ்ச்சியால் ஒரு பொருளைப் பலபடியாகப் புனைந்துரைப்பதுண்டு. அங்ஙனம் புனைந்துரைப்பதெல்லாம் உண்மையாகக் கொள்வதில்லை. ஜீவனுக்கு மூலப்பிரகிருதி போகசாதனமாகவிருந்தாலும் ஜீவத்வம் அதற்கில்லை. மேலும் ஜீவாத்மாவை ஜகத்காரண வஸ்துவாகிய ஸர்வேசுவரனுக்குச் சரீரமாக அநுஸந்தானஞ் செய்கிறவன் மோக்ஷமடைவான் என்று சொல்லப்பட்டுளது. மூலப்பிரகிருதியை ஜகத்காரணமாகக்கருதி அநுஸந்தானஞ் செய்தால் சம்சார ஹேதுவாகுமேயல்லது மோக்ஷஹேதுவாகமாட்டாது.

4. பசு தன்கன்றினிடமிரக்கங்கொண்டு அதனை ஊட்டுங் காலத்தன்றி, பசுவின் மடியினின்று பால் தானே வழிவதில்லை; பள்ளமான விடமிருந்தா

5. காந்தத்தை சமீபத்தில் வைத்தால் அசேதனமாகிய இரும்பானது தானே அசைகிறது. காலுள்ள குருடனும், கண்ணுள்ள நொண்டியும் கருதிய ஓரிடத்திற்குச் செல்ல அசக்தராவார்கள். இவ்விருவருள் நொண்டியானவன குருடன் மேலேறிக்கொண்டு 'இவ்வாறு போவாய்' என்றேவ அவன் செல்கிறான். அதுபோலப் பிரகிருதி தானே சிருஷ்டிப்பதற்குச் சக்தியற்றதாயிருக்கினும், ஜீவனும் வியாபாரமற்றவனாயிருந்தாலும் ஜீவன் தன் சமீபத்திலிருந்து ஏவ அசேதனமான பிரகிருதி ஜகத்சிருஷ்டியைச் செய்கிறது. ஈண்டு ஏவுகையாவது-சமீபத்திலிருத்தலேயாம். இதனால் மூலப்பிரகிருதிக்கு ஜகத்காரணத்வமுண்டென்பது நன்கறியலாம்.

லன்றி நீர்தானே ஓடமாட்டாது. ஆகப்பால் சுரப்பதற்கும், நீர் ஓடுவதற்கும் முறையே பசுவினிரக்கமும், பள்ளமானவிடமும் காரணங்களாகும். மேலும் பரமாத்மா அந்தராத்மாவாயிருந்து பால்நீர்களைச் சுரக்கவும், பெருகி ஓடவுஞ் செய்கிறானென்றுகொள்ளவேண்டும். அசேதனமான பிரகிருதி தானேசிருஷ்டிக்கிறதென்று சொல்வது சிறிதும்பொருந்தாது. இன்னும் அசேதனமான பிரகிருதிக்கு இச்சையில்லாமையால் இது ஜகத்காரணமென்னில் எப்பொழுதும் சிருஷ்டித்துக்கொர்ண்டேயிருக்கவேண்டும். இன்றேல் எப்பொழுதும் சிருஷ்டிக்காமலிருக்கவேண்டும். பிரளயம் சிருஷ்டி என்ற பெருவழக்கு மிருக்கலாகாது. இப்பெருவழக்குண்மையால் மூலப் பிரகிருதி தானே சிருஷ்டிக்கிறதென்பது நியாய விரோதமாம்.

5. காந்தத்தின் அண்மையுண்டானபோது இரும்பு அசைகிறது அதன் அண்மை எப்பொழுதில்லையோ அப்பொழுது இரும்புக்கு அசைதலுண்டாவதுமில்லை. எப்பொழுதாவது ஒருசமயம் நொண்டியென்பான் குருடனுக்கு வழிகாட்டுவான். அப்பொழுதுதான் அவன் செல்வான். அவன் வழிகாட்டாதபோது நடக்கமாட்டான். அதுபோல் ஜீவன் பிரகிருதியின் சமீபத்திலிருக்கும்போது பிரகிருதிஜகத்தைச் சிருஷ்டிக்கிறது; அஃதில்லாதபோது ஜகத்தைச் சிருஷ்டிப்பதில்லை என்று சொல்வதற்கியலாது. ஜீவன் எப்பொழுதும் பிரகிருதியின் சமீபத்திலேயிருக்கிறானாதலால் பிரகிருதி எப்பொழுதும் ஜகத்தைச் சிருஷ்டித்துக்கொண்டேயிருத்தல்வேண்டும். பிரளயகாலமென்பது வரலாகாது. ஆதலால் ஈண்டெடுத்துக்காட்டிய உதாரணமிரண்டும் பொருத்தமுடையனவல்ல.

6. இன்னும் ஜகத்துக்கும் பிரம்மமே காரணமென்னில்; விகாரப்பாடுடைய இந்த ஜகத்தானது பிரளய காலத்தில் பிர்மத்தில் ஒடுங்கிவிடுகிறதெனல்வேண்டும், அவ்வாறுகொண்டால் காரியரூபமான இந்த ஜகத்திலுள்ள புண்ணிய பாபங்கள், சுகதுக்கங்கள் அறிவு அறிவின்மைகள் முதலியஎல்லாத்தோஷங்களும் பிரம்மத்திற்குண்டாகவேண்டுமென்று ஒப்புக்கொள்ளவேண்டும். மேலும் ஜகத் பிர்மத்தோடு ஒடுங்கிய பின்னர் மறுபடியுமுண்டாகிற சிருஷ்டியில் ஒருவன் உயர்ந்தவனும் இழிந்தவனும் பிறத்தற்குக் காரணம் சொல்ல வியலாது. இஃதல்லாமலும் பிரம்மத்தோடு ஒடுங்கிய ஜகத்துக்கு மறுபடியும் சிருஷ்டி நொப்புக்கொண்டால் முக்தியடைந்தவனும் சம்சாரியாக வேண்டி நேரும். பிரளயத்தில் ஜகத்தானது பிரம்மத்தில் ஒடுங்குகிறதில்லையென்றாலோ ஜகத்துக்குப் பிரம்மம் காரணமென்று சொல்வதற்கியலாது.எவ்வழியாலும் பிரம்மத்திற்கு ஜகத்காரணத்வமுண்டென்பதில் பலதோஷங்களுண்டாகின்றன வன்றோ!

இந்தச் சாங்கியரொழிந்த வேறு சில மதவாதியர்களும் பரமாணு முதலியவைகட்கும் ஜகத்காரணத்வமுண்டென்று வாதிக்கிறார்கள். அவர்கள் கூற்றுக்களெல்லாம் வேதத்திற்கும், யுக்திக்கும் விரோதமாயிருக்குமாதலால் ஜகத்காரணத்வம் ஒப்புயர்வற்ற பரம்பொருளுக்கே உண்டென்பது ஒருதலை.

---

6. கார்யரூபமான ஜகத்திற்குள்ள தோஷங்களெல்லாம் பிர்மத்திற்குண்டாகமாட்டா. சாத்தன் பால்யனாய், காளையாய, கிழவனாய்ப் ரிணைமங்களை யடைந்தாலும் அந்தப்பால்ய யௌவன கிழத்தனங்களாகிய விகாரப்பாடுகள் ஆத்மாவுக்குண்டாவதில்லை. அதுபோல் சிதசித்துக்களைச் சரீரமாகவுடைய ஸர்வேசுவரன் ஜகத்ரூபமாகப் பரிணமித்தால் அந்த ஜகத்திலுள்ள உத்பத்தி நாசமுதலிய தோஷங்கள் சரீரங்களாகிய சிதசிதத்துக்களுக்கேயுண்டாகும். அவற்றுக்கு அந்தராத்மாவாயுள்ள ஈசுவரனுக்கு வருவதில்லை. சிருஷ்டியில் ஜீவர்கள் புண்ணிய பாவ கர்மங்களுக்கேற்றவாறு தேவன் மனுஷ்யன் தனவான் வறியன் புத்திமான் மூடனென்ற உயர்விழிவுகளை அடைகிறார்கள். முத்தியடைந்த ஜீவர்கட்குப் புண்ணிய பாவரூபமான கர்மம் நாசமாய் விட்டபடியால் சம்சார ஸம்பந்தம் அவர்கட்குண்டாவதில்லை.

இது வெட்டுண்டது; கொம்புள்ளது; கொம்பில்லாதது என்றால் வெட்டுண்கை, கொம்புண்மை, கொம்பின்மை என்ற விசேஷங்களையுடைய பொருள் ஒன்றாகமாட்டாது. அதுபோல உலகத்தை உண்டாக்கல், காத்தல், ஒடுக்கல் என்ற மூன்று தொழில்களையுடையவன் ஒருவனுகான். மூன்று பெயராயிருத்தல் வேண்டுமன்றோ வெனின்? அற்றன்று. சாத்தன்; கருமையன; யௌவனமுடையவன்; குண்டலமணிந்தவன் என்றால் இம்மூன்றுவிசேஷங்களையுடையவன் ஒருவனேயென்பது யாவருமறிந்ததன்றே. அதுபோல இங்கும் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையுடைய பிரம்மவஸ்து ஒன்றேயாகலாம்.

தச்சன் வீட்டைக் கட்டுவதற்குவேண்டிய வஸ்துக்களைச் சேகரித்துக்கொண்டு வீட்டைக் கட்டுகிறான். அதுபோல் பரமாத்மா உலகத்தைச் சிருஷ்டிக்குமிடத்து அநேக உபகரணங்களையுடையவனாய்ச் சிருஷ்டிக்கவேண்டும்; வேதாந்தத்தில் ஜகத் சிருஷ்டிக்கு முன் பரமாத்மா ஒரு உபகரணமுமில்லாதவனாயிருந்தாரென்று சொல்லப்பட்டுள்ளது. உபகரணமில்லாத பரமாத்மாவுக்கு ஜகத்காரணத்வம் கூடாதென்னின்? கார்யத்தைச்செய்யும்போது அநேக உபகரணம் வேண்டுமென்றநியமமில்லை எவ்வாறெனின்; பால்தயிராம்போது ஒருபகரணமுமில்லாமல் தானே தயிராகிறது. அதுபோலப் பரமாத்மா யாதொருபகரணமுமில்லாமல் சிருஷ்டிக்கிறான் என்பதிற் குறையாதுளது? மேலும் இந்திரன் முதலான தேவர்கள் தமக்குவேண்டிய பொருள்களை யாதொரு சாமக்கிரியுமின்றித் தம் சங்கற்பத்தால் சிருஷ்டிக்கிறார்களென்றால்,ஸர்வசக்தியுடைய பரமாத்மாதன் ஸங்கல்பத்தால் உலகத்தைச்சிருஷ்டிக்கத்தடையென்ன?

பரமாத்மாயாதொரு உபகரணமுமில்லாமல் உலகத்தைச்சிருஷ்டிக்கிறானென்று ஒப்புக்கொண்டாலும் மற்றோர் சம்சயமுண்டாகிறது. அது வருமாறு:—

பரமாத்மா அவயவரூபியாயிருந்து உலகைச் சிருஷ்டிக்கின்றானா? அவயவமில்லாதவனாயிருந்து சிருஷ்டிக்கின்றானாவென்னில்; வேதத்தில் பிர்ம்மம் நிரவயவரூபமுடையதென்று சொல்லியிருப்பதால் அவயவமின்றியே உலகைச் சிருஷ்டிக்கிறானெனல்வேண்டும். இவ்வாறு

ளைக்கில் அவன் ஜகத்தாகப் பரிணமிக்கும்போது அவனுடைய பூரண ஸ்வரூபமும் ஜகத்தாகப் பரிணமித்துவிட்டதென்றுகொள்ள வேண்டும். அப்பொழுது நித்யவிபூதியாகிய பரமபதத்தில் பிரம்மமில்லையென்று ஒப்புக்கொள்ளவேண்டி வரும். இது எவ்வகையாலும் பொருந்தாது. இதற்காக அவனுக்கு அவயவமுண்டென்று அங்கீகரித்து அதனுடைய சில அம்சம் நித்யவிபூதியிலிருக்கிறதென்று ஒப்புக்கொண்டால் 'பிர்ம்மம் நிரவயவம்' என்று சொல்லுகிற வேதவாக்யம் பொருளற்றதாய்விடும். பின்னை யாது செய்வதென்னின்?

உலக திருஷ்டாந்தங்களைக்கொண்டு இவ்வாறு சங்கிக்கக் கூடாது. பிரம்மம் உண்டென்பதில் வேதமே பிரமாணம். ஆகையால் அந்தப் பரமாத்ம வஸ்து உலகத்தைக்காட்டிலும் வேறுபட்டதேயாம். உலகத்தில் நிரவயவவஸ்து விஷயமாக உண்டாகக் கூடிய சங்கையைத் தத்துவங்கடந்து நின்ற பரமாத்ம விஷயத்தில் உபயோகிக்கக்கூடாது. பிரம்மம் நிரவயவனுயிருக்தே உலகைச் சிருஷ்டிக்கிறுனென்பதில் வேதமே பிரமாணமாகையால்பிர்ம்மத்தை ஒப்புக்கொள்வதுபோல இதையும் ஒப்புக்கொள்ளவேண்டும். இதனுல் அவன் அரூபியாய் யாண்டும் நிறைந்துள்ளானென்பது பெறப்படும்.

பரமாத்மா உபகரணமின்றியும், அவயவமின்றியும் உலகினைச் சிருஷ்டிக்கின்றுன் என்று ஒப்புக்கொண்டாலும் இறைவன் யாது பிரயோஜனத்தைக் கருதி உலகினைச் சிருஷ்டிக்கின்றுனென்ற வினு வெழும்? ஒருவன் ஒரு கார்யத்தைச் செய்யும்போது ஏதேனுமொரு பிரயோஜனத்தை முன்னிட்டே செய்கிறுன். ஸர்வேசுவரன் ஒன்றுலொரு குறைவற்றவனுதலால் அவன தனக்கொரு பயனைக்கருதி உலகையுண்டாக்குகிறுன் என்றுரைக்கலாகாது. உலக சிருஷ்டியால் ஜீவர்கட்கு நரகவாஸ முதலிய கொடிய துன்பங்களுண்டாவதால் இவர்களின் நன்மைகருதி யுண்டாக்குகிறுனென்று சொல்வதற்குமிடமில்லை. பின்னையாது கருதிச்சிருஷ்டிக்கின்றுனென்னில்?

இதற்குச் சமாதானம் வேதவியாஸர் தாமருளிய "லோகவத்து லீலா கைவல்யம்." "லோகவத்து லீலா கைவல்யம்" என்ற

ஸூத்திரத்தில் அருளிச்செய்தார். அஃதாவது உலகத்தில் சக்ர வர்த்தியாய் விளங்குகிறவன் ஒன்றுமொரு குறைவற்றவனுயிருந் தாலும் விநோதத்தினிமித்தமாகப் பந்தாடுதல் முதலிய காரியங் களைச் செய்வதுபோல இந்த ஜகத் சிருஷ்டியில் இறைவனுக்கு மற் றோர் பிரயோஜனமில்லாவிடினும் விளையாட்டினிமித்தமாகவே சிருஷ்டிக்கின்றனெனல் வேண்டும். லோக தேசிகனும் "இதுக்குப் பிரயோஜனம் கேவலலீலை" என்று அருளிச்செய்தார். (லீலை-விளை யாட்டு. அஃதாவது-அப்பொழுதுண்டாகிற இன்பமொழிய எதிர் காலத்தில் வருவதொரு பலத்தை எதிர்பாராது செய்கிற வியாபார விசேஷம்.) இதுபற்றியே இங்கு "அலகிலா விளையாட்டுடையார்" என்றார்.

அவர் தலைவர்-முத்தொழில்களையுடையவனும், அத்தொழில் களைத் தனக்கு விளையாட்டாகக்கொண்டவனும் எவனே அவனே தலைவனாவான். 'அன்னவர்க்கே' என்பதிலுள்ள ஏகாரத்தை அவ ரென்பதிலும் கூட்டுக. அவர் என்பது ஈண்டு வழுவமைதி. முத் தொழில்களைச் செய்வதற்கு எல்லா மறியுமறிவும், எல்லாவன்மை யும் வேண்டுமாதலால் முத்தொழிலுடையான் என்ற அர்த்த பலத் தால் இறைவனுக்கு ஸர்வஜ்ஞத்வமும், ஸர்வசக்தித்வமுமுண்டென் பது பெறப்படும்.

அன்னவர்க்கே சரணங்கள்-முத்தொழிலுடையவனும்; எல்லாமறியு மாற்றலுடையவனும், யாதொருபகரணமின்றியும் அவயவமின்றியும் சிருஷ்டிக்க வல்லவனும், யாண்டும் நிறைந் தவனும், முத்தொழில்களை விளையாட்டாகக் கொண்டவனு மாகிய ஸர்வேசுவரனுக்கேசரணங்கள் உரியனவாம். சரணம்- மங்களாசரணம். (மங்கள வாழ்த்து) உலகத்தில் ரஜோகுணமுடையவராயும், தமோகுணமுடையவராயுமிருப்பார் தம் மறிவிற்கேற்றவாறு இறைமைக்குணங்களிலாயினுமையும் உடைய ரெனக்கருதி அத்தெய்வங்களை அவர்கள் போரப்பொலியப் புனைந் துரைக்கின்ற வாழ்த்துக்களுமடங்க, 'சரணங்கள்' என்று பன்மை யாற் கூறினர். இதனால் பிறதெய்வ வாழ்த்துக்களும் இறைவனை யே சென்றடையுமென்பது தெளிவாயிற்று.

ஆனால் பிறதெய்வங்களை வாழ்த்துகிற வாழ்த்துக்கள் அத்தெய்வங்களைச் சாராமல் அவையும் ஸர்வேசுவரனையே சாருமென்பது எவ்வாறு பொருந்துமென்னில்? வாழ்த்து எனவே அது புகழ்ந்துரையாயிருக்குமென்பது தெளிவு, அப்புகழ்ந்துரைகட்கு அத்தெய்வங்கள் பொருளாகமாட்டா. பிள்ளைக்கண்ணனைச் செந்தாமரைக் கண்ணன் என்று புகழ்ந்துரைத்தால் பிள்ளைக்கண்ணன் செந்தாமரைக் கண்ணனாவானோ? செந்தாமரைக்கண்ணன் எவனோ அவனையன்றோ அச்சொல் குறிப்பிடும். அதுபோல வாழ்த்துரைகட்கு இறைமைக் குணமிலராயினோர்கள் பொருளாகமாட்டார்களாதலால் அவ்வுரைகளெல்லாம் இறைவனையே குறிப்பிடுமென்க.

இஃதன்றியும் ஸர்வேசுவரன் *ஸர்வ சப்தவாச்யனாதலால் பிறதெய்வ வாழ்த்துக்களும் அவனையே சென்றடையுமென்று கொள்

* ஸர்வசப்தவாச்யன்—எல்லாச் சொல்லிற்கும் பொருளாயிருப்பவன். சப்தங்கட்குப் பர்யவஸான விர்த்தியென்றும், அபர்யவஸான விர்த்தியென்றும், இரண்டு சக்தியுண்டு. இவற்றுள் பர்யவஸான விர்த்தியாவது—முக்கிய விசேஷ்யத்தை யுணர்த்தாமல் விசேஷண மாத்திரத்தை யுணர்த்துவதால் முடிவு பெறுவது. இதை அமுக்கிய விர்த்தி என்றுஞ் சொல்வதுண்டு. இதை உலக வழக்கினாலறியலாம். மனிதன் என்றால் மனித சரீரத்தையும் அந்தச் சரீரம் நிலைபெற்றிருப்பதற்குக் காரணமாகிய ஜீவனையுமுணர்த்தும். சரீரத்திற்கு ஜீவன் விசேஷ்யமாயிருந்தாலும் ஜீவனுக்கும் அந்தர்யாமியாயிருக்கிற பரமாத்மாவை நோக்க ஜீவன் விசேஷணமாகிறான். ஆக மனுஷ்யன் என்றால் மனுஷ்ய சரீரத்தையும், அந்தச் சரீரத்தையுடைய ஜீவனையுமுணர்த்துமென்பதை விசேஷண மாத்திரத்தை யுணர்த்தி முடிவு பெறுவதென்று சொல்வார்கள். அபர்யவஸான விர்த்தியாவது—முக்ய விசேஷ்யத்தை யுணர்த்தி முடிவு பெறுவது. இதை முக்கியவிர்த்தியென்றுஞ் சொல்வதுண்டு. இது, உலகவழக்காலறியப்படுவதன்றி வேதாந்த வாக்யங்களாலறியப்படுவதாம். அஃதாவது-மனுஷ்யன் என்ற சொல்லே பரமாத்மாவை யுணர்த்துமென்பது. எவ்வாறெனின்; மனுஷ்யன் என்ற சொல் மனுஷ்ய சரீரத்தை நிலைநிறுத்தற்குக் காரணமாகிய ஜீவனையுணர்த்தி அதனோடமைந்துவிடாமல் ஜீவனுக்கும் ஸத்தாஹேதுவாய் அந்தர்யாமியாயிருக்கும் பரமாத்மாவையுணர்த்தும். ஆகையால் எல்லாச் சொல்லிற்கும் பரமாத்மாவை யுணர்த்துவதே முக்யமாம். இந்த அபர்யவஸான விர்த்தியாகிய முக்யவிர்த்தியை மேற்கொண்டே "அன்னவர்க்கே சரணங்கள்" என்றார்.

ளினும் பொருந்தும் "......நம்மின் கவிகொண்டு நம்மிட்ட தெய்வமேத்தினல், செம்மின் திருமுடியெம் திருமாலுக்குச் சேருமே." என்று ஆழ்வாரருளிச் செய்ததும் இங்கறியத்தக்கது.

ஆக, இச்செய்யுளில் மூத்தொழிலுடையவன என்றதனுல் இறைவன் ஸர்வ சக்தியுடையவனென்பதும், சக்தியிருக்கினும் எல்லாமறியு மாற்றலிருந்தாலன்றி ஆத்மாக்களின் புண்ணிய பாப கர்மங்களையறிந்து அவற்றிற்கேற்றவாறுசிருஷ்டிக்க வியலாதாதலால் முத்தொழிலுடையவனென்ற அர்த்தபலத்தால் எல்லாமறியுமாற்றலுடையவனென்பதும், அலகிலா விளையாட்டுடையான் என்றதனுல் ஆனந்தகுண முடையவனென்பதும், ஆனந்தம் ஸத்வகுணத்தின் கார்யமாதலால் கார்யத்தைக் குறிப்பிடவே அதன் காரணமும் ஸித்தித்தவின் ஸத்வகுணமுடையவனென்பதும், அன்னவர்க்கே சரணங்கள் என்றதனுல் ஸர்வசப்த வாச்யன் என்பதும், ஸர்வசப்த வாச்யனெனவே அரூபியாய் யாண்டும் நிறைந்துள்ளான் என்பதும், தலைவர் என்றதனுன் உலககர்த்தாவென்பதும் பெறப்பட்டன.

தொடரும். ப. அ.

ஸ்ரீ:

திருக்குறளாராய்ச்சி

(வான் சிறப்பு.)

கடவுள் வாழ்த்ததிகாரத்தில் கடவுள் உலகிற்குத் தலைவனுயிருக்கிறுனதலால் அவனைச் சிந்தித்து வந்தித்து வாழ்த்தி உய்ய வேண்டுமென்றுரைக்கப்பட்டது. இந்த அதிகாரத்தில் மழையின் வாழ்த்துரைக்கப்படுகிறது. *அறுவகை வாழ்த்தில் இதுவுமொன்றுகுமாதலால் வாழ்த்ததிகார வரிசையில் இதையுமொன்ருக வைத்தார். ஒப்புயர்வற்ற இறைவன் உலகத்தைச் சிருஷடிக்கத் தொடங்

* அறுவகைவாழ்த்தாவன—முனிவர் வாழ்த்து பசு வாழ்த்து அந்தணர் வாழ்த்து அரசர் வாழ்த்து மழை வாழ்த்து நாடு வாழ்த்து என்பன.

குகையில் "𑌅𑌪𑌏𑌵 𑌸𑌸𑌰𑍍𑌜𑌾𑌦𑍌 𑌤𑌾𑌸𑍁 𑌵𑍀𑌰𑍍𑌯𑌮𑌵𑌾𑌸𑍃𑌜𑌤𑍍" "அபஏவஸஸர்ஜாதௌ தாஸு—வீர்ய மபாஸ்ருஜத்" என்றபடி முன்னர் ஜலதத்வத்தைச் சிருஷ்டித்துத் தன் சக்தியை அதிற் செலுத்தினுனென்று சொல்லப்பட்டுளது. தன் சக்தியைச் செலுத்தினுனெனவே ஜலதத்துவத்திற்கு இறைவனுக்குரிய ஆற்றலுண்டென்பது பெறப்படும். இதுபற்றியே பரிமேலழகரும் அதிகார இயைபுரைக்க வந்தவிடத்து "......அக்கடவுளதாணையால் உலகமும் அதற்குறுதியாகிய அறம்பொருளின்பங்களும் நடத்தற்கேதுவாகிய மழையினது சிறப்புக்கூறுதல், அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்" என்றுரைத்ததும் இங்கறியத்தக்கது.

ஆசிரியர் மழைச் சிறப்பென இவ்வதிகாரத்திற்கு இயற்பெயராற் கூருது "வான்சிறப்பு" என ஆகுபெயரான் கூறியதற்கு ஏதேனும் ஒரு கருத்திருத்தல் வேண்டும். ஏனென்றால் கங்கையின் அண்மையிலிருப்பதால் இது சைத்யத்வ பாவனத்வங்களையுடையது என்ற கருத்தைக்கொண்டவன் 'கங்கையில் இடைச்சேரியுள்ளது' என்றுரைக்கிறுன். இதனுல் இயற்பெயரைவிட்டு இலக்கணையாற் கூறுவதற்கெல்லாம் பிறிதோர் கருத்திருத்தல் வேண்டுமென்பது ஒருதலையாமென்க. ஜலதத்வம் வியாபகப்பொருளாகிய இறைவனுடைய சக்தியைப் பெற்றுள்ளதினுல் இதுவும் வியாபகத்வமுடையதாயிருக்குமென்பார் வான்சிறப்பென்றுர். ஏனைய பூதங்களை நோக்க மற்றெல்லாவற்றிற்கு மிடத்தைக் கொடுத்துக்கொண்டு வியாபகத்வமுடையதாயிருப்பது ஆகாசமாம். மழைச்சிறப்பெனின் இவ்வளவு பொருள் கொள்வதற்கிடந்தராதென்பது தெளிவு.

மேலும், ஒப்புயர்வற்றவனுயும், எண்ணிறந்த மங்களகுணமுடையவனுயும, குறைவற்ற புகழுடையவனுயுமிருக்கிற இறைவனே வாழ்த்திற்குரியவனுவான். அவனை யொழிந்தவரெல்லாம் வாழ்த்திற்குரியவராகார்களென்ற மரியாதையையும் விளக்க முன்பு கடவுள் வாழ்த்தென்றுரைத்துப்பின் வான் வாழ்த்தென்னுது 'வான் சிறப்பு' என்றுர். அரசர் வாழ்த்து, ஆவாழ்த்து; முனிவர் வாழ்த்து முதலிய பல வாழ்த்துக்கள் தொன்றுதொட்டு வழங்கிவரக் காண்கிறேமாதலால் வாழ்த்தும் ஏனையோர்கட்கும் உரிமையாகுமென

பத அறியப்படுகிறதன்றோவெனின்; அற்றன்று. பகவச் சப்தம் இறைவனையே சுட்டியுணர்த்துவதாயிருந்தாலும் அச்சொல் உபசாரமாக வஸிஷ்டபகவான், நாரதபகவான், வால்மீகிபகவான் என்று ஏனையோர்கட்கும் வழங்கப்படுவதுபோல வாழ்த்தென்பதும் உபசாரமாக ஏனையோர்கட்கும் உரியதாகுமென்றறியத்தக்கது.

இதுநிற்க; அண்டோற்பத்தி கூறுகின்றவிடத்தில் இறைவன் மூலப்பிரகிருதியை அதிஷ்டித்துநிற்க, அதினின்று மஹானும், மஹானின்று வைகாரிகம் தைஜஸம் பூதாதி என்ற மூன்று அஹங்காரங்களும்; இவற்றுள் வைகாரிகத்தினின்றும் இந்திரியங்களும், பூதாதியினின்றும் ஆகாச முதலிய பூதங்களுமுண்டாகின்றன என்று சொல்லப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்க, இங்கு இறைவன் முன்னர் ஜலதத்துவத்தைச் சிருஷ்டித்தான் என்று சொல்வது எவ்வாறு பொருந்துமெனின்? பூதோற்பத்திக் கிரமத்தில் ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்கினியும், அக்கினியிலிருந்து நீரும், நீரிலிருந்து பூமியும் தோன்றினவென்று சொல்லப்பட்டுளது. இந்தப் பஞ்ச பூதங்களுள் பின்னுள்ள பூதங்கட்கு முன்னுள்ள பூதங்கள் ஸூக்ஷ்மங்களாயும், முன்னுள்ளவைக்குப் பின்னுள்ளவை ஸ்தூலங்களாயுமிருக்கும். ஆகாசத்தைக் காட்டிலும் வாயு ஸ்தூலமானது. வாயுவைக்காட்டிலும் அக்கினி ஸ்தூலமானது. அக்கினியினும் ஜலம் ஸ்தூலமாயிருக்கும். உலகினர்க்கு ஸ்தூலமான பொருளை யெடுத்துக் காட்டினால் நன்கு விளங்குமென்ற கருத்தோடு ஜலதத்துவத்தை முன்னர் சிருஷ்டித்தானென்று சொல்லப்பட்டுளது.

இஃதன்றியும், இறைவன் †அகடிதகடனா சாமர்த்திய முடையவனாதலால் முன்னர் ஜலதத்துவத்தைச் சிருஷ்டித்து, அது ஓடுகிற பொருளாயிருப்பதால் அதனோடு கடினமான பிருதிவியைச் சேர்த்துப் பின்னையும் நெகிழ்ந்தமைகண்டு அதை வலிக்கைக்காக அக்கினியையிட்டு வலித்து, அது மிகைத்துத் தீயுமளவானவாறே அதனை

† அகடிதகடனா ஸாமர்த்யம்—சேராத வஸ்துக்களைச் சேர்ப்பிக்கத் தக்க வல்லமை.

யாற்றுவதற்காகக் காற்றை யுண்டாக்கி, அதன்மேலும் இப்பூதங்கட்கு இடத்தைத் தருவதற்கு ஆகாசத்தையுமுண்டாக்கி அண்ட சிருஷ்டியைச் செய்தானென்று கொள்ளினும் பொருந்தும்.

இறைவனது சக்தியைப் பெற்றுள்ள ஜலதத்வத்திற்கு முத்தொழிலாற்றலு முண்டென்பதைப் பல திருக்குறள்களால் வெளியிடுகிறார்:—

(1) மழை இடையறாதுநிற்க உலகம் நிலைபெற்று வருதலால் அம்மழையானது உலகிற்கு அமிர்தமென்றுணரத்தக்கது. அமிர்தம், உண்டார்களைச் சாவாதிருக்கச் செய்யும். மழை உலகிற் பிறந்த உயிர்களை நிலைநிற்கச் செய்கின்றதினால் அமிர்தமென்று கூறினர். ஞானத்தையே ஸாரமான குணமாகவுடைய ஆத்மாவை ஞானமென்பதுபோல உலகத்தை நிலைநிறுத்தும் இயல்பே தனக்கு சாரமான குணமாகவுடைய மழையை அமிர்தமென்றார்.

மழையானது உலகத்தை எவ்வகையான் நிலைபெறச் செய்கிறதென்னின்? (2) இது உண்பார்க்கு நல்லவுணவுகளை உளவாக்கி, அவற்றை யுண்கின்றார்க்குத் தானும் உணவாய் நிறகுமாற்றான் நிலைநிற்கச் செய்யுமென்க. உலகத்தில் எவ்வளவு சிறந்த கொடையாளரும் தம்மிடத்திலுள்ள பொருள்களைக் கைம்மாறு கருதாது பிறருக்கு உதவி புரிவார்களேயன்றித் தம்மைப்பக்ஷிக்குமாறுதவிபுரிவாரொருவருமில்லை. இந்த ஜலதத்துவம் தன்னையும் பக்ஷிக்குமாறுபகரிக்கின்ற இவ்வுபகாரம் யாவரும் கொண்டாடத் தக்கதே.

இவ்வுணவுப் பொருளின்றேல் உலகத்துயிர்களெவ்வாறுமெனின? (3) மழைவேண்டுங்காலத்துப் பெய்யாது பொய்க்குமாயின், கடலாற் சூழப்பெற்ற அகன்ற உலகத்தின்கண் பசியானது நிலைபெற்று நின்று உயிர்களை வருத்தும். இங்கு உயிர்கள் வாழா

(1) வானின் றுலகம்வழங்கிவருதலாற்
றானமிழ்தமென் றுணரற்பாற்று.

(2) துப்பார்க்குத்துப்பாயதுப்பாக்கித்துப்பார்க்குத்
துப்பாயதூஉமழை.

(3) விண்ணின் றுபொய்ப்பின்விரிநீர்வியனுலகத்
துண்ணின் றுடற்றும்பசி.

மைக்குக் காரணமுரைக்கப்பட்டது. மழையானது உணவுப் பொருள்களை யுண்டாக்கி உலகைக் காக்கிறதென்றும், அதையுண்டு பண்ணாமல் அழிக்கிறதென்றும் கூறியதினால், இதற்குக் காத்தற் றொழிலும் அழித்தற்றொழிலுமுண்டென்பது பெறப்பட்டது.

உலகத்தில் உழவரன்றோ உணவுப் பொருள்களை யுண்டுபண்ணி உதவுகின்றார்களென்னின்? (4) மழையென்னும் வருவாய் தன்பயன் குன்றுமாயின் உழவர் ஏரான் உழுதலைச் செய்யமாட்டார்கள். இதனான் உழுநர் உழவுத் தொழிற்கும் காரணமாயிருப்பது மழையே யாமென்பது அறியலாகும். மழை உளதேல் உழவுத் தொழிலுண்டாம். அதனான் உணவுப்பொருளுண்டாம். அதனான் உயிர்கள் வாழும் இஃதின்றேல் உயிர்கள் வாழமாட்டா.

இனி, மழைக்கு இருவகை ஆற்றலுமுண்டென்பது தெளிவுரக அறிவிக்கப்படுகிறது. (5) பூமியின் கண்வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதும், அவ்வாறு கெட்டார்க்குத் துணையாய்ப் பெய்து முன் கெடுத்தாற்போல எடுப்பதும் இவையெல்லால் வல்லது மழையாம்.

மக்களுயிர்களையன்றி ஏனைய உயிர்களும் மழையின்றி வாழமாட்டாவோவென்னின்? (6) மேகத்திற்றுளி வீழிற் காண்பதல்லது வீழாதாயின் அப்பொழுதே பசும்புல்லினது தலையையும் காண்டல் அரிதாமாகலால் ஏனைய உயிர்களும் மழையின்றி வாழமாட்டா. மற்ற வுயிர்களும் வாழமாட்டாவென்ற பொருள் தன்னடையே வித்திப்பதற்காக ஓரறிவுயிர் மேலிட்டுச் சொல்லப்பட்டது.

தரையில் வாழுமுயிரையன்றிக் கடலில் வாழும் உயிர்களுமழையின்றி யுண்டாகமாட்டாவோவென்னில்? (7) அளவில்லாத கடலும்

(4) ஏரினுழா அருழவர்புயலென்னும்
வாரிவளங்குன்றிக்கால்

(5) கெடுப்பதூஉங்கெட்டார்க்குச்சார்வாய்மற்றாங்கே
எடுப்பதூஉமெல்லாமழை.

(6) விசும்பிற்றுளிவீழினல்லான்மற்றாங்கே
பசும்புற்றலைகாண்பரிது.

(7) நெடுங்கடலுந்தன்னீர்மைகுன்றுந்தடிந்தெழிலி
தானல்காதாகிவிடின்.

*தன்னியல்பு குறையும்; மேகம் அதனை முகந்து அதன்கண் பெய்யாதொழியுமாயின். கடலினியல்பு குறைபடாதிருப்பதற்கும் மழை அவசியம் வேண்டும்.

மழையானது, உலகில் உழவுத்தொழிலை நடைபெறச்செய்து, உணவுப்பொருள்களையுண்டாக்கி உயிர்களின் பசியை அகற்றி வாழ்விக்கிறது; இது பெய்யாது நின்று உணவுப்பொருள்களிலவாக்கி, உயிர்களைப் பசியான் வருத்திப் போக்குகிறது; மேலும் இது, நீர்வாழுயிர்களையும் புவிவாழுயிர்களையும் உண்டாக்குகிறது. ஆக ஜலதத்துவமானது ஆக்கல் அளித்தல் அழித்தலென்ற முத்தொழில்களையுமுடைமையான் இது இறைவனது சக்தியைப் பெற்றுள்ளதென்பதும், உலகம் நடத்தற் கேதுவாயிருக்குமென்பதும் வெளியாயின.

இறைவன் "கருமமுங்கரும பயனுமாகிய காரண"னாயிருப்பது போல அவனது சக்தியைப் பெற்றுள்ள ஜலதத்துவமும் உலகம் நடத்தற் கேதுவாய்மாத்திரமிருப்பதன்றி, அறம்பொருளின்பமென்ற புருஷார்த்தங்களுக்கும் ஏதுவாயிருக்கும். எவ்வாறெனின்? (8) மழை பெய்யாதாயின் தேவர்கட்கும் இவ்வுலகில் மக்களாற் செய்யப்படுகிற விழாவோடு கூடிய பூஜை நடவாது. இங்குத் தேவர்கட்குப் பூஜை நடவாது என்றதனான் தேவர்கட்கோர் புகழ்க் குறைவுண்டாகிறதென்று கொள்ளத்தக்கதில்லை. மக்கட்குத் தேவாராதனையான்விளையும் அறப்பயனுக்கும் மழையே காரணமாகுமென்றறியத் தக்கது.

மக்கட்குத் தேவாராதன மாத்திரத்தினுலன்றித் தானதவங்களினுலும் அறமுண்டாகுமன்றோவென்னின; (9) மழை பெய்யாதாயின் அகன்ற உலகின்கண் தானமும் தவமுமாகிய இரண்டறங்களுமுளவாகா. இல்லற துறவறங்களைமேற்கொண்டார்க்கும் தத்தமக்

* "தன்னியல்பு குறைதலாவது-நீர்வாழுயிர்கள் பிறவாமையும், மணி முதலாயின படாமையுமாம்"

(8) சிறப்பொடுபூசனைசெல்லாதுவானம்
வறக்குமேல்வானோர்க்குமீண்டு.

(9) தானந்தவமிரண்டுந்தங்காவியனுலகம்
வானம்வழங்காதெனின்.

குரிய தானதவங்கட்கு மழை இன்றியமையாததாயிருக்கும், மழையில்லாதொழியுமேல் பொருள்களுண்டாகமாட்டா. பொருளின்றேல் தானஞ் செய்தற்கியலாது. இதனான் இல்லறவொழுக்கம் நடைபெறாதொழியினும் †பொறிகளைப் புலன்களிற் செல்லவொட்டாதடக்கும் துறவறவொழுக்கமாகிய தவமும் மழையின்றி நடைபெறாதென்பது எவ்வாறு பொருந்துமெனின்? உலகப்பற்றற்று வனஞ்சென்று தவஞ்செய்வார்கட்கும் பசிப்பிணியாற்றுதற்குக்-காய் கனி கிழங்கு முதலிய பொருள்கள்வேண்டும். இவையின்றேல் பசிப்பிணியதிகரிக்கும். அதனான் தவவொழுக்கம் நடைபெறாது, "மானந்தனங்கல்விவண்மையறிவுடைமை, தானந்தவமுயற்சி தாளாண்மை-தேனின், கசிவந்தசொல்லியர்மேற் காமுறுதல் பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்" என்று ஆன்றோர்புகன்றதுமிங்கறியத் தக்கது. ஆனால் வாயுவையும் பக்ஷித்துக்கொண்டு தவஞ்செய்தார்களென்று அறியப்படுகிறதினால் இங்ஙனம் தவஞ்செய்வார்கட்கு மழையின்றியும் அவ்வொழுக்கம் நடைபெறுமன்றோவென்னின்; நீண்டகாலம் இடையறாது யோகநிலையிற் பயின்ற பேராற்றலுடைய ஒருசிலர்க்கே வாயுவைப் புஜித்துத் தவஞ்செய்தற்கியலுமேயன்றிப் பெரும்பாலார்க்குமது செய்தற்கியலாதாததால் மழையின்றித்தவவொழுக்கமும் நிகழாதென்றே உணரத்தக்கது.

அறத்திற்கு மழை ஏதுவாயிருந்தாலும் உலகினர் பெருமுயற்சியான் பொருளையீட்டி அதனான் இன்பம் நுகரக்காண்கின்றோமாதலால் பொருளின்பங்கள் நடத்தற்கு மழை ஏதுவாகாதெனின்; (10) எவ்வகைப்பட்ட மேம்பட்டார்க்கும் நீரையின்றிப் பொருளின்பங்கள் அமையாவாயின் அந்நீரும் இடையறாதொழுகும் ஒழுக்கும்வானையின்றியமையாது. நீரினால் தான்ய முதலிய பொருள்கள் விளைகின்றன. உலகினர் அத்தான்ய முதலிய பொருள்களான் தேகத்தைப் போஷித்து இன்பம் நுகர்கிறார்கள். முயற்சியானீட்டப்பட்ட தனம்படைத்தவராயிருந்தபோதிலும் உணவுப்பொருளில்லாதொழியுமேல் அவர் தேகத்தைப் போஷிப்பதற்குச் சக்தியற்றவராவார்.

(10) நீரின்றமையாதுலகெனின்யார்யார்க்கும்
வானின்றமையாதொழுக்கு.

தேகபோஷணையில்லாதபோது இன்ப நுகர்தற்கியலாதென்பது ஒருதலை. இஃதன்றியும் நீர்வளமின்றேல் பெருமுயற்சியான் பொருளீட்டுவதற்குமியலாது ஆதலால் நீரின்றிப்பொருளின்பங்களுண்டாகமாட்டாவென்பது யாவராலும் தெளியப்பட்டதோன்றும். அந்நீர் இடையறுதொழுகுகிறஒழுக்கிற்கும் காரணமாயிருப்பதுமழையாம்.

இவ்வாராய்ச்சியான் ஜலதத்துவத்திற்கு முத்தொழிலாற்றலுமுண்டென்றுரைக்கு முகத்தான் இறைவனது சக்தியின் பெருமையுரைக்கப்பட்டது.

ப. அ.

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

[மதுரை ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபால் ப்ரஹ்மஸ்ரீ V. S. ராமசாமி சாஸ்திரிகள் (B. A; B. L.) எழுதுவது.]

(22-ம் பக்கத்தொடர்ச்சி)

8-வது அத்தியாயம்.

வ்ரஜகோபி—பாகவதம்.

பிராம்மணகந்யா

வஸ்திரஹரணத்தினுடைய மறைவான தாத்பரியத்தை நாம் மேலே கூறியுள்ளோம். அது சம்பந்தமாக இன்னமொரு கதை பாக்கியிருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணபகவான் கீதையில் "யத்கரோஷ" என்று திருவாய்மலர்ந்தருளியபடி ஜகதீசுவரனிடம் எல்லாவற்றையும் எவன் அர்ப்பணம் செய்கிறானோ அவனே ஈசுவரனையடைய அதிகாரியாகிறான். வஸ்திரஹரண காலத்தில் கோபிகள் ஸ்ரீகிருஷ்ணனிடம் ஸர்வார்ப்பணம் செய்யக்கூடிய நிலையிலிருந்தார்கள். ஆகை

யாலவர்கள் ஸ்ரீகிருஷ்ணனை யடையத்தகுந்தவர்களானார்கள். பாகவதக்காரர் இன்னமோர் உபந்யாஸம் ரசனைசெய்து இந்தத்தத்துவத்தை மிகவும் விளக்கிக் காட்டியிருக்கிறார். அவ்வுபந்யாஸமாவது:—

ஒருகால் மாடு மேய்த்துக்கொண்டிருக்கும்பொழுது வனத்தில் நடுப்பகலில் கோபாலச் சிறுவர்கள் மிகவும் பசியால் நொந்து ஸ்ரீகிருஷ்ணனிடம் தங்களுக்கு உணவு அளிக்குமாறு வேண்டினார்கள். சமீபத்தில் ஓரிடத்தில் சில பிராம்மணர்கள் யஜ்ஞம் செய்துகொண்டிருந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் கோபாலர்களை அங்குப் போய்த் தன் பெயரைச்சொல்லி அன்னபிக்ஷை யெடுக்கும்படி யேவினான். கோபாலர்கள் அவ்விதமே செய்தார்கள். பிராம்மணர்கள் அச்சிறுவர்களுக்கு அன்னம் கொடுக்காமல் அடித்துத் துரத்திவிட்டார்கள்.

அவர்கள் கண்ணனிடம் திரும்பிவந்து நிகழ்ந்ததை யுரைத்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் கோபாலர்களை நோக்கி நீங்கள் மறுபடியும் யாகசாலைக்குப்போய் அந்தப்புரத்திலிருக்கிற பிராம்மண ஸ்திரீகளைக்கண்டு என் பெயரால் அன்னபிக்ஷை கேளுங்களெனக்கூறினான். கோபாலர்கள் அவ்விதமே பிராம்மண ஸ்திரீகளிடம் அன்னம் யாசித்தார்கள்.

பிராம்மண கன்னிகைகள் ஸ்ரீகிருஷ்ணனின் பெயரைக்கேட்ட மாத்திரத்தில் அச்சிறுவர்களுக்கு வேண்டியவரை உணவளித்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் சமீபத்திலிருக்கிறானென்று கேள்வியுற்று அவரை தரிசனம் செய்வதற்காக அவர்களும் ஸ்ரீகிருஷ்ணன் சமீபம் வந்தார்கள். அச்சிறுமிகள் ஸ்ரீகிருஷ்ணனை ஈசுவரனென்றே அறிந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் அவர்களை வீட்டிற்குத் திரும்பிப் போகும்படி பலமுறையுஞ்சொன்னான். பிராம்மண கன்னிகைகள் நாங்கள் உமது பக்தைகள்; தாய் தகப்பன் சகோதரன் பிள்ளை முதலானவர்களையும்விட்டு இவ்விடம் வந்தோம்; நாங்கள் மறுபடியும் திரும்பிப்போனால் அவர்கள் எங்களைச்சேர்த்துக்கொள்ளமாட்டார்கள்; நாங்களெல்லாரும் உமது திருவடியில் விழுகிறோம்;எங்களுக்கு வேறுகதிகொடுப்பீர்; என்றனர்.

ஸ்ரீகிருஷ்ணன் அவர்களைக் கிரகித்துக்கொள்ளவில்லை. பாருங்கள். அவர் கூறியதாவது அநுராகத்திற்கு அங்கஸங்கம் மாத்திரம் காரணமல்ல. நீங்கள் என்னை மனதில் நினையுங்கள்; சீக்கிரத்திலென்னையடைவீர்கள்; சிரவணம் தர்சநம த்யாநம் கீர்த்தனம் இவைகளால் என்னை யெவ்விதமடைவீர்களோ அவ்விதம் என்னிடம் சேர்ந்திருப்பதால் அடையமுடியாது. ஆதலால் நீங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லுங்கள்; அவ்விதமே அவர்களும் இல்லத்திற்குச் சென்றார்கள். பிராம்மண கன்னிகைகள் கிருஷ்ணனை அடைவதற்கென்ன செய்தார்கள்? கேவலம் தாய் தகப்பன் முதலியவர்களை விட்டுவந்தார்கள். 'அவருடைய அழகைக்கண்டு மோஹித்து அவரிடம் வந்தார்கள். பகவானிடத்தில் ஸர்வார்ப்பணத்தையும் அவர்கள் செய்யவில்லை. சித்தியடைவதற்கவர்கள் அதிகாரம் பெறவில்லை. ஆனதுபற்றியே ஸித்தியடைவதற்கு முதல்படியான ச்ரவண மனன நிதித்யாஸநாதிகளைச் செய்யும்படி அவர்களுக்கு உபதேசித்தருளினான். பவித்திரமான பிரம்ம குலத்திலுண்டான பிராம்மண கன்னிகைகள் ஸாதனமின்றி அவரை யடைய அதிகாரம் பெறவில்லை. ஸாதனத்தின் வலிமையால் கோப கன்னிகைகள் அவரையடைய அதிகாரம் பெற்றார்கள்.

9-வது அத்தியாயம்.

வ்ரஜகோபி—பாகவதம்.

ராஸலீலா

பாகவதம் 10-வது ஸ்கந்தத்தில் 29 முதல் 33 வரை ஐந்து அத்யாயங்கள் ராஸக்கிரீடையைப் பற்றிக்கூறுகின்றன. இவைகளில் முதலாவது அத்யாயத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவான் மதுரமாய் வேணுகானம் செய்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. விஷ்ணு புராணத்தில் கானத்தைப்பற்றிச் சொல்லும்போது கலா என்கிறதை உபயோகப்படுத்தியிருக்கிறார். பாகவதத்திலும் இப்பதமே "ஜகௌ கலம்" என்று உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு டீகை செய்த விசுவநாத சக்கிரவர்த்தி யென்பவர் இந்தக்கலா சப்தத்திலிருந்து

தான் ஸ்ரீகிருஷ்ண மந்திரத்திற்கு பீஜாக்ஷரமான க்லீம் என்ற பதம் வெளிப்பட்டதெனக் கூறுகிறார்.

இனிய குழலோசையைக் கேட்டுக்கோபாங்கனைகள் கிருஷ்ண தரிசனத்திற்காக நாலா பக்கத்திலிருந்தும் ஓடிவந்தார்கள். கோபி ஜனங்கள் அருகில் வந்ததும் ஸ்ரீகிருஷ்ணன் அவர்களை நோக்கி நீங்கள் க்ஷேமமா? உங்களுக்குப் பிரியமான காரியம் எது செய்வேன்? இடைச்சேரி சௌக்கியமா? நீங்கள் எதற்காக வந்தீர்கள்? இந்த ராத்ரி பயங்கரமானது; இவ்விடத்தில் துஷ்டமிருகங்களிருக்கின்றன; இவ்விடம் ஸ்திரீ ஜனங்கள் வரக்கூடாது; ஆதலால் நீங்கள் திரும்பிச் சேரிக்குள் புகுங்கள்; உங்களுடைய பெற்றோர் முதலிய உறவினோர் உங்களைத் தேடுவார்கள்; பந்துக்கள் பயப்படும்படி நீங்கள் செய்வது உசிதமல்ல; பூர்ணிமைச் சந்திரனால் அலங்கரிக்கப்பட்டதும், யமுனையிலிருந்து வீசுகிற குளிர்ந்த காற்றினால் அசைகிற மரங்களின் தளிர்களாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டதுமான இவ்வனத்தைக் கண்டுகளிக்க வந்தீர்களா? ஏ சதிகளே! நீங்கள் சீக்கிரம் திரும்பி வீடுசென்று பதிசேவை செய்யுங்கள்; குழந்தைகள் வருந்தும்; அவைகளுக்குப் பாலூட்டுங்கள்; அப்படிக்கன்றிக்கே நீங்கள் என்னிடம் ஸ்நேகம் செய்து அதன் வசத்திலீடுபட்டு இங்கிருக்கிறீர்கள்; எல்லாப்பிராணிகளும் இவ்விதமாக என்னிடம் ஸ்நேகம் செய்கின்றன. ஏ கல்யாணிகளே! கபடமில்லாமல் பதி சிஸ்ருஷையும் பந்துக்கள் குழந்தைகள் இவைகளைப் போஷித்தலுமே ஸ்திரீகளுக்கு முக்கிய கடமையாம்; கணவன் நல்லவனாகினும் கெட்டவனாகினும் புத்திமானாயினும் ஜடனாயினும் பலவானாயினும் ரோகியாயினும் அக்கணவனிடம் கேடு நினைக்காமல் அவனையே பேணுதலால் பெண்டிர்கள் பாபம் விலகப்பெற்று இருவுலகத்திலும் மங்களம் பெறுவார்கள்; கணவன் எப்படிப்பட்டவனாயினுமவனை விடுதல் கூடாதகாரியம்; குலஸ்திரீகள் உபபத்தியையடைவது கொடுமையான காரியம்; அது மிகவும் பயங்கரமாய் யாவராலும் நிந்திக்கத்தக்கது. மாயிருக்கிறது; ச்ரவணத்தினாலும், தர்சனத்தினாலும் த்யானத்தினாலும் கீர்த்தனத்தினாலும் தான் என்னுடைய பாவோதயம் உண்டாகும்; என்னை யணுகினதினால் அது உண்டாவதில்லை.

பாகவதமியற்றியவர் ஸ்திரீ ஜனங்களுக்குப் பாதிவ்ருத்ய தர்மத்தைப் போதிக்க முயன்றாரே யொழிய வேறில்லை. பாதிவ்ருத்ய தர்மத்தின் மஹாத்மியத்தை அறியாமல் கிருஷ்ணன் இந்திரிய சம்பந்தமான காமனு வர்ணனத்தில் பிரவர்த்தித்தாரெனபது பொருந்தாது. ஸ்ரீகிருஷ்ணன் பிராம் மண கன்னிகைகளிடமும் இவ்விதமே இயம்பினர். அவருடைய உபதேசத்தைக்கேட்டு அவர்கள் வீடுசென்றார்கள். ஆனல் கோபிகள் திரும்பிப்போகவில்லை. அவர்கள் அழுதுகொண்டு மறுமொழி கூறியவை— "நீரிவ்விதம் உரைக்கவேண்டாம்; நம்பாத கமலத்தில் எல்லா விஷயங்களையும் ஸமர்ப்பணம் செய்துவிட்டோம்; பரமாத்மா முமுக்ஷுக்களை யெப்படி விடமாட்டாரோ அப்படியே யெங்களையும் கைவிடாதீர்; நீர் தர்மக்ஞர்; கணவனைப் பின்பற்றுதல் ஸ்திரீ ஜனங்களுக்கு ஸ்வதர்மமென எங்களுக்கு உபதேசித்தது உம்மிடமேயிருக்கட்டும்; ஏனென்றால் நீரே ஈசுவரன்; மனுஷ்ய தேகமெடுத்தவருக்கு நீரே ஆத்மா; ஹேபரமாத்மந்! நீரே நித்யப்பிரியர்; உம்மிடமே ஆத்மாதியிருக்கிறது; துக்கத்தைக் கொடுக்கக் கூடிய பதி புத்திராதிகள்மூலம் யாதுபயன்?" என்பன. புராணக்காரர் கோபிகள் ஸ்ரீகிருஷ்ணனை ஈசுவரனைகப்பாவித்து பகவதர்ப்பணமாக எல்லாவற்றையும் துறந்தார்களெனக்கூறியுள்ளார். ஸ்ரீகிருஷ்ணனின் வடிவழகைக்கண்டு மோஹித்து அவருடன் சேரவிரும்பினர்களெனக் கூறுதல் காவ்ய வர்ணனைக்காக ஏற்பட்டதுபோலும்.

பாகவதத்தில் கூறிய ராஸக்கிரீடையில் இந்திரிய ஸம்பந்தமாக யாதொன்றுமில்லை. பரமார்த்த தத்வம் பொருந்தியிருக்கிறது. 30வது அத்யாயத்தில் கிருஷ்ணன் மறைந்துபோவதும் அவரைக் கோபிகள் தேடுவதுமான விருத்தாந்தமிருக்கிறது. 31வது அத்யாயத்தில் கிருஷ்ணனைக் குறித்துக் கோபிகள் பாடியதைக்குறித்து வருணித்திருக்கிறது 32வது அத்யாயத்தில் கிருஷ்ணன் மறுபடியும் தோன்றிய விருத்தாந்தம் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வத்தியாயத்தின் இறுதியில் கோபிகளைக்குறித்து ஆத்யாத்மிகதத்வத்தை யுபதேசித்த கதையிருக்கிறது. பிறகு 31வது அத்யாயத்தில் ராஸக்கிரீடையென்ற விளையாட்டை வருணித்திருக்கிறது. ராஸக்

கிரீடையென்பதும் விஷ்ணு புராணத்தில் கூறியபடி ந்ருத்தம் கீதம் இவை கூடிய விளையாட்டு மாத்திரமே. புராணக்காரர் ஸ்ரீகிருஷ்ணனை ஜிதேந்திரிய ஸ்வரூபனாக வருணித்திருக்கிறார். இந்திரிய விஷயமொன்றுமில்லை.

(தொடரும்.)

ஸ்ரீ:

சென்னை, ஸ்ரீவைஷ்ணவ சங்கம்.

இச்சங்கத்தின் நான்காவதாண்டு நிறைவுவிழா சென்னையில் சென்ற 1-1-30 உயில் ஸ்ரீகபிலேசுவரபுரம் ஜமீன்தார் ஸ்ரீமாந் ஸ்ரீராஜவெங்கட செங்கய்யா அப்பா ராவ்பகதூர் அவர்கள் அக்கிராஸநாதிபத்தியத்தில் நடைபெற்றது. அப்பொழுது சங்கத்தார்கள், இனி இச்சங்கம் வைஷ்ணவப்பிரசாரஞ் செய்தல் முதலிய உரிய காரியங்களைச் செய்துவரவேண்டும் என்று தீர்மானித்தார்கள். அதற்கேற்ப இச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமாந் இராகராமானுஜ தாஸரவர்கள், காரியதரிசி ஸ்ரீமாந் K. வெங்கடசாமி நாயுடு (B. A., B. L) அவர்கள், சங்கத்தின் அபிமானிகள் என்ற இவர்களின் நன்முயற்சியால் பலவிடங்களிலும் வைஷ்ணவ பிரசாரம் நடைபெற்றுவருகிறது இன்னும் இவர்கள் முயற்சி இடைவிடாது நடைபெறுமேல் எம்பெருமான் திருவுள்ளத்திற்கு உகப்பாயிருக்கும். ஆதலால் அங்ஙனமே இவர்கள் செய்துவருவார்களாக.